சாதி ஒழிப்பே ! சமூக விடுதலை !!







# ஆதித்தமிழர் பேரவை
# AATHITHAMIZHAR PERAVAI

தமிழ்நாடு

நாள் : 11.05.2012.

## பத்திரிக்கை செய்தி

சேரல்: செய்தி ஆசிரியர் அவர்கள்,

................................. நாளிதழ் / தொலைக்காட்சி,

~~சிவகாசி~~. நெல்லை.

செய்தி ஆசிரியருக்கு,

ஆதித்தமிழர் பேரவையின் வணக்கங்கள். கீழ்க்கண்ட செய்தியினை தங்களது நாளிதழில் வெளியிட்டுதவுமாறு / தங்களது தொலைக்காட்சியில் ஒளிபரப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கூடங்குளம் அணுமின் நிலையத்தை திறக்கக்கூடாது! இடிந்தகரை மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் வேண்டுகோள்**

தனது நாட்டின் கடைசி அணு உலையை ஜப்பான் நாட்டு அரசாங்கம் அந்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இழுத்து மூடியுள்ள நிலையில், கூடங்குளத்தில் மட்டும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், இந்திய, தமிழக அரசுகள் செயல்படுவது வேதனையை அளிக்கிறது.

மனித வாழ்க்கையை எளிதாக்கவும், மனித ஆற்றலை விரயப்படுத்தாமல், பயன்படுத்தவும் அறிவியல் வளர்ச்சி மிக

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235

மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com

முக்கியமானதாகும். நன்கு வளர்ந்த அறிவியல் வசதிகள் கொண்ட உலகை எதிர்காலத் தலைமுறைக்கு விட்டுப்போவது எவ்வளவு அவசியமோ, சுற்றுச்சூழலும், பாதுகாப்பும், நோயும், மாசும் இல்லாத உலகை விட்டுப்போவதும் அவ்வளவு அவசியமாகும்.

ஆனால், வளர்ச்சி என்ற பெயரில் எதிர்காலத் தலைமுறையின் பாதுகாப்பையும் உயிர் வாழ்தலையுமே கேள்விக்குள்ளாக்குவதை பூவுலகை நேசிக்கிற யாராலும் அனுமதிக்க முடியாது. மின்சாரம் தேவை என்கிற பெயரில் அணு உலைகளை திறந்து, எதிர்காலத் தலைமுறையை ஊனப்படுத்தி அழிக்க முனைவதை அனுமதிக்க முடியாது.

அந்த வகையில் தான், கடந்த 6 மாதங்களாக, கூடங்குளம் அணு உலையைத் திறக்கக்கூடாதென வலியுறுத்தி இடிந்தகரை பொது மக்கள் தன்னெழுச்சியாக உறுதியுடனும் தீரத்துடனும் அறவழியில் போராடி வருகின்றனர்.

ஒரு வகையில் இந்த போராட்டத்தை அந்த மக்களிடையே தூண்டி விட்டது அரசாங்கம் தான், ஏனென்றால் அமைதியாக தானுண்டு தன் வேலையுண்டு என்று வாழ்ந்து வந்த மக்களை பேரிடர் நேரும்போது என்ன செய்ய வேண்டுமென்று நடத்தப்பட்ட ஒத்திகைதான் மக்களுக்கு அருகில் அணு உலை என்ற பெயரில் அமைந்திருக்கும் அந்த கொடூர பூதத்தின் கோர முகத்தைக் காட்டியது. ஜப்பானின் புகுஷிமா ஏற்படுத்திய பேரழிவுப்பாடமும் சேர்ந்து கொள்ள மக்களின் போராட்டம் மேலும் தீவிரமடைந்தது.

சுற்றியுள்ள கிராம மக்களின் ஒன்றுபட்ட உறுதிமிக்க போராட்டத்தால் பலமுறை பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு முறையும் ஏமாற்றப்பட்டே திருப்பி அனுப்பப்பட்டார்கள். சில சமயம் தாக்குதலுக்கு ஆளாகியும் பல சமயம் தாக்குதல் செய்தார்கள் எனப் பொய் பட்டம் கட்டப்பட்டும், வெகுவாக ஆதரித்து வரும் கோடிக்கணக்கான தமிழக மக்களிடமிருந்து அந்நியப்படுத்தவுமே முயற்சிகள் நடைபெற்றன.

ஆனாலும் நெஞ்சுரத்தோடு சலியாமல் போராடி வருகிற மக்களின் போராட்டக்குரலுக்கு மதிப்பளிக்காததால், தங்களை வருத்திக்கொள்ளும் காலவரையற்ற உண்ணாநிலை, வாக்காளர் அடையாள அட்டையை திருப்பிக் கொடுப்பது உள்ளிட்ட போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். மக்களின் கோரிக்கை மட்டுமல்ல, அரசாங்கம் வாக்குறுதி அளித்த கோரிக்கைகளும் சேர்த்தே புறக்கணிக்கப்பட்டு வருகிறது, எனவே, அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளையாவது நிறைவேற்ற வலியுறுத்தி

வரும் வேளையில் அப்பகுதி மக்களை பீதியில் ஆழ்த்தும் வகையில், ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பதும், அதிகளவிலான போலீசுப் பட்டாளத்தைக் குவிப்பதும், சுற்றியிருக்கிற கடைகளை அடைக்கச் சொல்லி மக்களுக்கு உளவியல் ரீதியாக அச்சத்தை ஏற்படுத்துவதையும் ஆதித்தமிழர் பேரவை மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

இனிமேற்கொண்டாவது, தமிழக அரசாங்கம் இயன்றளவு விரைவாகத் தலையிட்டு இடிந்தகரையைச் சுற்றி வாழும் மக்களின் கோரிக்கைகளை ஏற்று அப்பகுதி மக்களுக்கு பாதுகாப்புணர்வை ஏற்படுத்தி தருமாறு ஆதித்தமிழர் பேரவை தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

போராட்டக்களத்தில் உள்ள மக்களுக்கு, ஆதித்தமிழர் பேரவையின் முழு ஆதரவைத் தெரிவித்துக்கொள்வதோடு, மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இப்போராட்டம் வெற்றிபெற இடிந்தகரை மக்களுக்கு துணை நிற்க வேண்டுமெனவும் பேரவை கேட்டுக்கொள்கிறது.

ஒடுக்கப்பட்டோர் விடுதலைப் பணியில்

இரா. அதியமான் 12-5-2012

(இரா.அதியமான்)

நிறுவனர்.